O.S.No.115/2023 & O.S.No.418/2025 தேதி – 10.07.2026

வா.சா.1.– குருவையா

1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை –

எனக்கு எழுத படிக்கத் தெரியுமா என்றால் நான் படிக்கவில்லை. அதனால் எழுத படிக்கத் தெரியாது. நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் கொத்தனார் வேலை செய்கிறேன். அது தவிர ரியல் எஸ்டேட் தொழில் செய்துவருகிறேன். ரியல்எஸ்டேட் தொழில் என்றால் புரோக்கராக இருக்கின்றேன். 1 முதல் 3 வரையிலான பிரதிவாதிகளை எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் புரோக்கர் மூலமாக தெரியும். புரோக்கர்களின் பெயர்கள் என்ன என்றால் லிங்கம், முத்து, மற்றும் சுந்தர் ராஜ் ஆகியோர்கள் ஆவார்கள். 1 முதல் 3 வரையிலான பிரதிவாதிகளை மேற்சொன்ன புரோக்கர்கள் மூலமாகத்தான் தெரியும் என்று எனது வழக்குரை மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். அவர்கள்தான் பிராது தபசு சொத்தினை அவர்கள் தான் எனக்கு காட்டினார்கள். மேற்சொன்ன 3 புரோக்கர்கள் தான் வா.சா.ஆ.3 ல் சாட்சிகளாக கையொப்பம் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி புரோக்கர்கள் பிராது தபசில் சொத்தினை எந்த தேதி, எந்த ஆண்டு எந்த மாதம் காட்டினார்கள் என்றால் 17.04.2022 ம் தேதி காட்டினார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.3 ல் பிராசு தபசில் சொத்தினை நான்தான் 1 முதல் 3 பிரதிவாதிகளிடம் கிரயம் கேட்டு அனுகியதாக சொல்லியுள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வழக்குரை மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் பிராது தபசில் சொத்தினை 1 முதல் 3 பிரதிவாதிகள் என்னை அணுகி கிரயம் செய்து கொடுக்க கூறியதாக உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ல் உள்ள முத்திரைத்தாள் யார் வாங்கினார்கள் சிவமுத்து தான் வாங்கி வந்தார். மேற்படி வா.சா.ஆ 3 ல் பத்திரம் வாங்கியவர் என்ற இடத்தில் ஏற்கனவே இருந்த பெயர்

ஒயிட்டனரால் அழிக்கப்பட்டு G. குருவைய்யா என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் சிவமுத்துதான் மேற்படி முத்திரைத்தாளை வாங்கிவந்தார். சிவமுத்துதான் முத்திரைத்தாளை வாங்கிவந்தார் என்று நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. கொத்தனார் வேலை செய்வதன் மூலம் எனக்கு வரும் மாத வருமானம் எவ்வளவு என்றால் வேலை இருந்தால் ரூ. 20 ஆயிரம் வரும். இல்லை என்றால் வேலையைப்பொறுத்து ரூ. 15 ஆயிரம் முதல் ரூ. 18 ஆயிரம் வரை கிடைக்கும். நான் வருமான வரி செலுத்துகின்றேனா என்றால் செலுத்துகின்றேன். எனது ஆண்டு வருமானவரி ரிட்டனில் ஆண்டுவருமானம் எவ்வளவு காட்டியுள்ளேன் என்றால் வருமானத்தினை பொறுத்து காட்டியுள்ளேன். மாத வருமானம் ரூ. 20 ஆயிரம் இருக்கும்பட்சத்தில் பிராது தபசில் சொத்தினை பொறுத்து ரூ. 91 லட்சத்திற்கு கிரய ஒப்பந்தப்பத்திரம் ஏற்படுத்தியுள்ளதாக கூறுவது பொய் என்று சொன்னால் சரியல்ல. வா.சா. ஆ 3 ஆவணத்தில் 12.05.2022 ம் தேதி இந்த கிரய ஒப்பந்தப்பத்திரத்திற்கு ஆதரவாக நம்மில் 1வது பார்டி 2வது பார்ட்டியிடமிருந்து ரொக்கமாக ரூ. 20 லட்சம் பெற்றுக்கொண்டார்கள் என்று எழுதியது யார் என்றால் சிவமுத்துதான் எழுதினார். சிவமுத்துதான் எழுதினார் என்ற விபரத்தினை எனது வழக்குரை மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் எல்லோரும் இருந்தார்கள். 3 சாட்சிகளும் இருந்தார்கள். நான் சொன்ன 3 சாட்சிகள் சுந்தர்ராஜ், முத்து, கூடலிங்கம் என்பவர்கள் தான் என்றால் சரிதான். மேற்படி 3 சாட்சிகளும் மேற்படி ரூ. 20 லட்சம் பெற்றுக்கொண்டதற்கான பக்கத்தில் கையொப்பம் செய்யவில்லை என்று சொன்னால் முதலில் ரூ. 5, 10,000/- வழங்கும்போது மட்டும் தான் புரோக்கர், சாட்சி வருவார்கள். கடைசியில் பத்திரம் எழுதும்போதுதான் வருவார்கள். அவர்களின் கமிசன் வாங்குவதற்கு வருவார்கள். தற்போது நான் கூறியபடி ரூ. 5,10,000/- வழங்கும்போது புரோக்கர் மற்றும் சாட்சிகள் இருந்தார்கள் என்று எனது வழக்குரை மற்றும் நிரூபண

வாக்குமூலத்தில் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். 12.05.2022 ம் தேதி அன்று நான் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு வா.சா.ஆ.3 ல் கூறியபடி ரூ. 20 லட்சம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு புரோக்கர் மற்றும் சாட்சிகள் முன்னிலையில் ரூ.5,10,000/- கொடுத்ததாக சொல்வது பொய் என்று சொன்னால் சரியல்ல. நான் சொன்ன புரோக்கர்கள் மற்றும் சாட்சிகளை விசாரித்தால் வழக்கு உண்மையா பொய்யா என்பது தெரியவரும் என்றால் சரிதான். நான் பிராது தபசில் சொத்து சம்பந்தமாக 01.06.2022 ம் தேதி அன்று விருதுநகர் உரிமையியல் நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் நான் எனது நிரூபண வாக்குமூலத்தில் சொன்ன விபரங்கள் அனைத்தையும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 01.06.2022 ம் தேதி வழக்கு தாக்கல் செய்த வழக்கில் பிராது தபசில் சொத்தினை எனக்கு எழுதிக்கொடுக்கும்படியோ அல்லது ரூ. 25, 10,000/- எனக்கு 1 முதல் 3 பிரதிவாதிகள் எனக்கு திரும்ப செலுத்தக்கோரி பரிகாரம் எதுவும் கேட்கவில்லை என்றால் பரிகாரம் கேட்டுள்ளேன். விருதுநகர் உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தபின்புதான் 2023 ல் இந்த நீதிமன்றத்தில் நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். ஏற்கனவே விருதுநகர் உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள வழக்கில் பரிகாரங்கள் எதுவும் கேட்காமல் தற்போது இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள வழக்கில் பரிகாரங்கள் எதுவும் கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. பிராது தபசு சொத்தில் நான் ரூ. 2 லட்சம் வரை செலவு செய்துள்ளேன் என்று கூறியதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்யவில்லை. ரூ. 2 லட்சம் செலவு செய்துள்ளதாக கூறி மேற்படி தொகையினையும் சேர்த்து பரிகாரமாக கோரவில்லை என்றால் சரிதான். நான் அ.வ.எண், 418/2025 ல் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் பல லட்சம் செலவு செய்து

இடத்தினை சீர்செய்துள்ளதாக கூறியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். பிராசு தபசில் சொத்தில் நான் எந்தவித செலவும் செய்யவில்லை என்றாலும் அதனால் தான் நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணையில் முன்னுக்கு பின் முரணாக கூறியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்குரை மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் பிராது தபசில் சொத்தினை நில அளவை செய்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரிதான். நில அளவை எந்த தேதியில் யாரை வைத்து செய்தேன் என்றால் ஒரு இன்சினியரை வைத்துதான் செய்தேன்.

1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்காள்ளப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிபதி,
ஸ்ரீவில்லிபுத்தூர்.